1996 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 50, திருமதி வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

50—

அக்ரோ பொறியியல் துறையின் பிரிவு நிறுவுதல்

*38700—திருமதி வி.ஜி. மணிமேகலை:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சுழி வட்டத்தில் அக்ரோ பொறியியல் துறையின் பிரிவை நிறுவுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சுழி வட்டத்தில் அக்ரோ பொறியியல் துறையின் பிரிவை நிறுவுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு புரட்சி யுகத்தின் எழுச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, 'வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்டுவது அறிவோய் நீ' என்ற வாக்கிற்கிணங்க வேண்டுகிற மக்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம், என்னுடைய தொகுதியில் திருச்சுழியைச் சுற்றியிருக்கிற கிராமங்கள் விவசாயப் பகுதியாக இருப்பதாலும், அங்கு இருக்கக்கூடியவர்கள் எல்லாம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களாக இருக்கிற காரணத்தினாலும்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியிலே இல்லை என்ற சொல்லுக்கு இடமில்லாத நேரத்திலே அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறிவிட்டார்கள். அதனால் அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து என்னுடைய திருச்சுழி பகுதியில் அக்ரோ பொறியியல் துறையின் பிரிவை நிறுவுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி வட்டத்தில் வேளாண் பொறியியல் துறையின்

பிரிவினுடைய கூட்டுறவு மையம் என்பது 12—3—1974 அன்று துவக்கப்பட்டது. அந்த மையம் 109 அங்கத்தினர்கள் ரூ. 7020 பங்குத் தொகை செலுத்தி பதிவு செய்து செயல்படாமல் இருக்கிறது. இந்த மையம் வேளாண் பொறியியல் பிரிவினுடைய கூட்டுறவு இணையத்துடன் இணையவில்லை. இணையவேண்டும் என்று சொன்னால் அந்தச் சங்கம் மீண்டும் 1000 ரூபாய் பணத்தை நுழைவுக் கட்டணமாகச் செலுத்தி, இணைத்துக் கொண்டால் அரசு அந்த மையத்திற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கற்பக மரத்தின் அடியில் இருக்கக் கூடிய காகமும் அமுது உண்ணும்' என்கிறது சீவகசிந்தாமணி. அந்த வகையிலே இன்றைக்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியிலே பலரும் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகிய நானே அந்த இணையத்திற்கு 1000 ரூபாயைக் கட்டிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து எனக்கு அந்தப் பொறியியல் துறையின் மூலமாக என்னுடைய தொகுதிக்கு இப்பிரிவை நிறுவுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சுழி வட்டத்தில் வேளாண் பொறியியல் பணிக் கூட்டுறவு மையம் தன்னுடைய பங்குத் தொகை, நுழைவுக் கட்டணம் செலுத்திவிட்டால், இணையத்தோடு இணைவதற்கு ஒப்புதல் அளித்துவிட்டால் ஒரு தனி அதிகாரி நியமனம் செய்யப்பட்டு அந்தப் பணி மையம் இணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 51, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

51—

கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன் வழங்குதல்

86912—டாக்டர் சு. மணிமேகலை:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—